வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு சட்ட திருத்த முன்வடிவு ஒன்றை இங்கே நாம் விவாதித்தோமே, அதற்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்து விட்டார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாநில ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால் அந்தச் சட்ட முன்வடிவு இன்னும் நிலுவையில் இருக்கிறது என்று பொருள். அந்தச் சட்ட முன்வடிவு நிலுவையில் இருக்கிறபோது, மீண்டும் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவரக்கூடாது என்பது விதிமுறை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன். ஏற்கெனவே 1937 ஆம் ஆண்டு சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது. தற்கு கவர்னருடைய இசைவு வந்திருக்கிறது.

1990 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது

(இ) மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."